# பத்திரிக்கை செய்தி

**உள்ளாட்சித் தேர்தல்கள் 2016 தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், திரு.பி.சீத்தாராமன், இ.ஆ.ப., (ஓய்வு), அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உள்ளாட்சித் தேர்தல்கள் 2016 முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், **திரு.பி.சீத்தாராமன், இ.ஆ.ப., (ஓய்வு), அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று 17.08.2016 நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் தெரிவித்ததாவது.

அனைத்து பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளை 100 % பார்வையிட்டு அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், கழிப்பறை, ஊனமுற்றோர் வாக்களிக்க ஏதுவாக சாய்தளம், உள்ளிட்ட வசதிகளை தல ஆய்வு செய்து வாக்குப்பதிவிற்கு தயார் நிலையில் வைக்க வேண்டும் எனவும் நகர்ப்புற வாக்குச்சாவடிகளுக்கு தேவைப்படும் மின்னனு வாக்கு இயந்திரங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், கிராமபுற வாக்குச்சாவடிகளுக்கு தேவைப்படும் வாக்குப்பெட்டிகளை தயார் நிலையில் வைத்திருக்குமாறும் தேர்தல் பணியாளர் விவரங்களை விரைவில் பெற்று அறிக்கை அனுப்பி வைக்கவும் தெரிவித்தார்.

மேலும், பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்டறிந்து போதிய பாதுகாப்பு குறித்து உறுதி செய்திடவும், தேவையான காவல் துறை பணியாளர்கள் விவரம் குறித்து அறிக்கையினை தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கவேண்டுமெனவும் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலை நல்லமுறையில் நேர்மையாக அமைதியாக நடத்திட அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென மாநில தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திரு.பண்டிகங்காதர், மண்டல இயக்குநர் (நகராட்சிகள்) சேலம், எம்.இளங்கோவன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் திரு.டி.ஸ்ரீதர், மகளிர் திட்டம் திட்ட இயக்குநர், திரு.கல்யாணசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி.லோ.சித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சித் தேர்தல்) திரு.ஜி.சரவணன், காவல் துணை கண்காணிப்பாளர் (தேர்தல்கள்) திரு.முத்துமாணிக்கம் மற்றும் அனைத்து துறைகளின் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி